ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

**स्नात्वा प्रत्यूषकाले स्नपनविधिविधौ नाहृतं गाङ्गतोयं**
**पूजार्थं वा कदाचिद्बहुतरगहनेऽखण्डि बिल्वादळानि ।**
**नानीता पद्ममाला सरसि विकसिता गन्धपुष्पैस्त्वदर्थं**
**क्षन्तव्यो मेऽपराधश्शिवशिव शिवभोः श्रीमहादेवशम्भो ॥**

अपराधस्तोत्रे ।

ஹே மஹேச! விடியற்காலத்தில் அதாவது காலை $4\frac{1}{2}$-மணி சுமாருக்கு ஸ்நானம்செய்து உமது அபிஷேகம் முதலான காரியங்களுக்கு வேண்டி கங்கை முதலிய புண்யதீர்த்தங்களிலிருந்தும் ஜலமானது கொண்டுவரப் படவில்லை. உம்மைப் பூஜிக்க வேண்டியதின் பொருட்டு எப்பொழுதாகிலும் ஒரு சமயத்திலாவது மிகவும் விஸ்தாரமான அரண்யங்களிலிருந்தும் பில்வதளங்கள் என்னால் எடுக்கப்படவில்லை. குளங்களில் மலர்ந்திருக்கும் தாமரைமலர்களும் மற்றுமுள்ள புஷ்பங்கள் சந்தனங்கள் இவைகளுடன்கூட உமது பூஜைக்காக கொண்டுவரப்படவில்லை. ஆகையால், நான் மிகவும் அபராதியாய்விட்டேன். ஹே சிவ! ஹே மஹாதேவ! ஹே சம்போ! என்னுடைய இந்த அபராதத்தை நீர் க்ஷமிக்க வேண்டுமென்று ஓர் பக்தர் பிரார்த்திக்கிறார்.

இதினால் மானிடராகத்தோன்றிய யாவரும் ஸம்ஸாரத்தாலேற்படும் துக்கத்தைப்போக்கி உத்தமமான சுகத்தை யடைய வேண்டியது முக்கியம். அதற்குப் பகவானுடைய அனுக்கிரஹத்தைப் பெறவேண்டி அவரை அபிஷேகத்தினாலும் அர்ச்சனங்களாலும் ஆராதிக்க வேண்டியது அவசியமென்றும் அவ்விதம் செய்யாவிட்டால் அது பெரிய தவறேயாகும். அந்த அபசாரத்திற்கும் ஈசுவரனிடமே மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் நம் பரமசார்யாவர்கள் நம்போன்றவர்களிடம் கருணை கொண்டு அறிவித்திருக்கிறார். சுபம்!

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மப்.
குரோதன-௵ மார்கழி-மீ௳ க௱௨

# பெண்குழந்தைகளை மிஷனெரி ஸ்கூலுக்கு அனுப்புவதால் உண்டாகும் அனர்த்தம்.

(எ௯௯-வது பக்கத்தொடர்ச்சி.)

நம்மில் சிலர்களையல்லவா ஆயுதமாகக்கொண்டு நம் மதவைரிகள் நம்மதத்தை ஜயிக்க ஆசைப்படுகின்றனர். அதனையறியாமல் அவர்கள் கை ஆயுதமாவதற்கு நாம் முயல்வது எவ்வளவு நலக்குறைவு ?

நம்மத வைரிகள் வைக்கும் பெண் பாடசாலைகளின் அனுபோகம் நம்மவரிலும் பலருக்கு உண்டு. நமது ஏழைப்பெண்கள் அறியாப்பாலகரென்பதையும் பாராது அவர்களுக்கு நம் மதாசாரங்களில் வெறுப்பும் அவர்கள் மதக்கொள்கையில் விருப்பும் வர நம் மதவைரிகள் படும்பாடு கொஞ்சமல்ல. சில பள்ளிக்கூடங்களில் வினவிடை ரூபமான ஒரு தமிழ் புத்தகத்தை நம் பெண்களுக்குப் பாடம்சொல்லி வருகின்றனர். அதில் 'பிரும்மா, விஷ்ணு ருத்திரன், இவர்கள் தேவர்களா? வெனக்கேட்டு, பொய், கொலை, களவு, முதலிய செய்து சர்வவல்லபமும் ஞானமுமின்மையைக் காட்டியிருக்கின்றபடியால் தேவர்களாகார்கள்' என்றும் 'இந்துமதம் உண்மையா ?' எனக்கேட்டு இன்னின்ன நியாயங்களால் 'உண்மையல்ல என்றும்; தானம், தவம் முதலியவற்றால் மோட்சமடையலாமா ? எனக்கேட்டு, ஏதேதோ யுக்திகளைச் சொல்லி அடையக்கூடாதென்றும், இந்து வேதாகமங்கள் கடவுள்சொன்னவையா ? எனக்கேட்டு அதற்கும் ஏதேதோ நியாயங்களைச் சொல்லி 'கடவுள் வாக்கல்ல' என்றும், இன்னும் இவ்வாறு

நமது வர்ணாச்ரமசமய தர்மங்களையெல்லாம் பற்றி வினவி மனம் போனவாறெல்லாம் விடையளித்து 'அவையனைத்தும் நம்பத்தகாதவை' என்றும் 'கிறிஸ்து மார்க்கம் ஒன்றே சத்தியம்' என்றும் போதித்து வருகின்றனர். இவ்வாறு சில வருஷங்களுக்கு முன் ஒரு பாதிரி பள்ளிக்கூடத்தில் நடந்து வந்ததுண்டு. இத்துர்ப் போதனையில் இளம் அறிவினராயுள்ள நம் செல்வப் புதல்வியர் பழகி வருவதனால் ஒரு காலத்துங் கெடுதியில்லை என்று எப்படிக் கூறமுடியும்? எமது அபிப்பிராயமாவது நம்மத வைரிகள் பாடசாலைகளில் நம்மக்கள் படிப்பதிலும் பாதகமில்லை; அவர்கள் மதக் கிரந்தங்களை நம்மக்கள் கற்பதிலும் பாதகமில்லை; இன்னும் நம் மதத்தில் குற்றங்களுளவாகக் காட்டும் பாடங்களையும்கூட நம்மக்கள் படிப்பதில் பாதகமில்லை. எங்ஙனமெனில் அந்தப் பாடங்களோடு இணையாகக் கிறிஸ்தவ மதத்திலுள்ள அந்தந்தக்குற்றங்களைக் காட்டும் பாடங்களையும் நம்மக்களுக்குக் கற்பித்துவரில் கிறிஸ்தவ பாடசாலைகளில் அவர்கள் படித்தலினால் பாதகமில்லை என்றே கூறமாட்டுவோம். அங்ஙனமின்றி, நம்மதாசாரங்களை மாத்திரம் குற்றமுள்ளன எனக்காட்டி ஒரு தலைப்பக்ஷமாய்ப் போதிக்கும் பாடசாலைகளில் நம்மக்கள் பயிலுவது பெருங் கேட்டை பயக்குமென்று உறுதியாகக் கூறப் பின்னிடோம்! பின்னிடோம்!! இவைகளை யோராது சிலர், நம் மதாசாரங்களுக்கு ஜன்மசத்துருக்களானோருக்குச் சகாயம் செய்ய முன் வந்து மாற்றானுக்கிடங்கொடுக்கின்றனர். இந்த அநியாயம் எங்கேனும் உண்டா? 'சுவிசேஷபோதகர்' என்னும் பெயரும், அவர்கள் கெஞ்சிக் கேட்கும் தன்மையுமே நமக்கு எச்சரிக்கையூட்டப் போதுமானவையாயிருக்க பிறர் நோக்கத்தை அறியாது நாம் பக்ஷிகளாவதற்கு இப்போது என்ன அவகாசம் நேரிட்டது.

தொடரும்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

# கடவுள்.

---

(ஏசுO-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்விதமே

**हेतुफलाश्रयालम्बनैस्संगृहीतत्वात्तेषामभावेतदभावः॥११॥योगसूत्रे॥**

ஹேது, பயன், ஆச்ரயம் ஆலம்பனம் இவைகளாலேயே வாசனை முளைக்கின்றது. இவைகளிராவிடில் வாசனையும் தொலைவதாம் எனும் பாதஞ்சலயோகதர்சனம். கைவல்ய பாதம் பதினொன்ரும் ஸூத்திரத்திலும் அதன் பாஷ்யங்களிலும் இங்ஙமே நன்கு போதித்திருப்பதைக் காணலாம்.

சுபவாசனையின் கார்யம் யாதென்பதை அறியாதவரையில் அதனை அப்பியசிக்க இயலாததால் சற்று அதனை விளக்குவோம். எப்படியிருந்தால் சுபவாசனை யோங்குமெனின் அது

**मैत्रीकरुणामुदितोपेक्षाणां सुखदुःखपुण्यापुण्यविषयाणां भावनातश्चित्तप्रसादनम् ॥** இதன் பொருள்

ஸுகிகளிடம் பிரீதியும், துக்கிகளிடம் கருணையும், புண்பவான்களான ஸாதுக்களிடம் ஸந்தோஷமும், பாபிகளிடம் உபேக்ஷையும் கொண்டு நடப்பதால் சித்தம் தெளிவுரும் எனும் யோகதர்சனம் ஸமாதிபாத ஸூததிரத்தில் பதஞ்சலி பகவானல் மிகச் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டது. இவ்விதம் சுபவாஸனையை யடைந்து அதனல் சித்த சுத்தி ஏற்பட்டபிறகு ஆசார்ய சமீபம் அடைந்து வித்தியாப்யாசம் செய்து சித்த சுத்தி பெற்று ஆன்மாவைப்பெற அர்ஹர்களாகிருர்கள். உண்மையில் உலகிலுள்ள ஜனங்களின் பூர்வகர்மத்திற்குத் தக்கபடியே இறைவன் பிறவியைத் தருகிறபடியால் பிராமணன் முதலிய ஜாதிபேதத்தை ஏற்படுத்தியிருத்தல் சிறிதும் பாரபக்ஷத் தன்மைக்கு ஏதுவாகாது. பாலூட்டி வளரும் குழந்தைகளுக்குப் பாலூட்டியும், சோறூட்டிவளரும் குழந்தைகளுக்குச் சோறூட்டியும், கலத்திலிட்டுப் புசிக்கின்ற குழந்தைகளுக்குக் கலத்திலிட்டும், பத்தியம் இருக்க

வேண்டிய குழந்தைகளுக்குப் பத்தியமிருந்தும், வளர்க்கும் அன்னைக்கு அக்குழந்தைகளிடம் பாரபக்ஷமுள்ளது என்பது எப்படி அனுசிதமோ, அப்படியே உலகிலுள்ள மனிதர்களிடம் பாரபக்ஷமுள்ளதென்பதும் அனுசிதமே என்க. பள்ளிக்கூடத்தில் படிக்கும் பாலர்கள் வயதில் ஒத்தவராயினும் அவர்களின் புத்தி பரிசயத்திற்குத் தக்கபடி உபாத்தியாயர் பாடபேதங்களை வைத்துக் கற்பிப்பது போலவே, மனித மாத்திரத்தில் உலகிலுள்ள ஸகலரும் ஒரே விதமாய்க் காணப்படினும் அவரவர் பரிபாகத்திற்குத் தக்கபடி கர்மங்களைச் சாஸ்திர கர்த்தாக்களாகிய நமது பூர்வாசரியர் விதித்திருக்கின்றனர். பாபிகள் ஸாமான்ய கர்மமுடையோர், புண்யவான்கள், யோகிகள், ஸகுண உபாஸகர் என்னும் இவர்களுக்குப் பரலோகம், ஸ்வர்க்காதிகள் உண்டு. இவ்விதம் கர்மவசப்பட்டு லோகாந்தரமடைவதையும், இங்கு வந்து ஜனிப்பதையும் சீலமாய்க்கொண்டு வாஸனையின்படி கர்மாக்களைச் செய்துகொண்டு ஒய்வொழிவின்றிச் சுழல் காற்றிலகப்பட்ட துரும்புபோல் சம்ஸார மண்டலத்தில் சூழ்ந்துகொண்டிருக்கும் இந்த ஜீவன் அநாதியான இப்பாவப்பிணியினின்றும் விமுக்தனாகவேண்டுமாயின் அநாதிமுக்தனும், நித்யசுத்த சுகபோதவடிவனும், பராசக்தியினும் திவ்ய மாயாவிலாஸமுடையவனும், ஸர்வக்ஞத்வம் முதலிய தன்மைகளையுடையவனும், ஸர்வ வல்லமை பொருந்தியவருமான முழுமுதற்கடவுளை ஆச்ரயித்தல் அவசியமே. அறியப்பட்டிராத பொருளை உபாஸிக்க இயலாததால் அவ்வறிவினை நன்றாய்த் தெரிந்து கொள்ளவேணும்.

ஈச்வரனாவது ஸ்தூலசரீரம் முழுதும் வியாபித்துக்கொண்டு அதனில் நடக்கும் ஸகல சங்கதிகளையும் ஜீவன் அறிந்துகொண்டிருப்பதுபோல பிரும்மாண்டங்களெல்லாவற்றிலும் வியாபித்துக்கொண்டு ஸகல ஜீவகோடிகள் செயல்களையும் அறிகின்றவனும் அவரவர் கர்மத்திற்கு ஏற்றபயனைத் தருவோனும், ஸகல வல்லமைகளும் பொருந்தியவனுமான முழுமுதற்கடவுளேயாம். ஈச்வரன் நித்யமுக்தன், ஸர்வக்ஞன். (ஜீவனோவெனில் இதற்கு முற்றும் விரோதமாய்ப் பரதந்திரனும் கிருமிகீடம்முதல் தேவசரீரம்வரையில். தேவசரீரம் முதல் கிருமிகீடம் வரையிலும்

உள்ள ஒவ்வொன்றிலும் புகுந்து புகுந்து) இன்பதுன்பங்களை அனுபவிப்பதும் பெரும் சுழல்காற்றில் அகப்பட்ட திருணம் போன்ற ஓய்வொழிவன்றி ஜனன மரண நாகங்களுள் சுழலுவோனும் கர்மங்களினால் பந்திக்கப்பட்டவனாகவும் அற்ப அறிவுடையோனுமானவன். ஆனால் முன்னோர் ஜீவனும், ஈசனும் ஒன்றே எனச் சுருதி ஸூத்திரங்கள் பொருளை விளக்கி இருக்க ஜீவனும் ஈசனும் வேறென, இங்ஙனம் வேற்றுமைப் படுத்திச் சொல்லுதல் உசிதமோ எனின் உசிதமாம். அதாவது அவர்கள் முக்தி நிலையினை நோக்க எல்லாம் நிற்குணமாகிய பிரும்மமே என்றனரே யன்றி வியாவஹாரிகமாய் ஜீவ ஈசுவரர்களை ஒன்றெனக் கூறியவர்களல்ல.

முக்யார்த்தத்தை நோக்க ஜீவேசுவரர்களுக்கு மிகுந்த பேதம் இருக்கிறதென்றே சொல்லியிருக்கின்றனர் என்பதை

**ऐक्यं तयोर्लक्षितयोर्न वाच्ययोः निगद्यतेऽन्योन्यविरुद्धधर्मिणोः।**
**खद्योतभान्वोरिव राजभृत्ययोः कूपाम्बुराश्योः परमाणुमेर्वोः ॥**

மினுமினுப் பூச்சிக்கும் ஸூர்யனுக்கும் போலவும், அரசனுக்கும் சேவகனுக்கும் போலவும், கிணற்றுக்கும் சமுத்திரத்துக்கும் போலவும், பரமாணுவுக்கும் பெரிய பொன்மலைக்கும் போலவும் மிக்க வித்தியாஸ குணமுடைவோராகிப் தத்வம் பதங்களுக்கு முக்யார்த்தமாயுள்ள அந்த ஜீவ ஈசுவரர்களுக்கு ஐக்யம் ஒவ்வாது. ஆகையால் லக்ஷ்யத்திற்கு ஐக்யமாகும் என ஸ்ரீ பரமாசாரியாரவர்கள் விவேகசூடாமணியில் கூறியிருப்பதைக்காண்க. உண்மையில் வஸ்துவை இன்னதென்று நன்றாய், அறிந்துகொண்டல்லவோ அதை நீக்கிக்கொள்ளும் வழியைத்தேடலாம். ரோகம் யாதென்று நன்றாய்த்தெரிந்து கொள்ளாவிடில் தக்க ஔஷதத்தைக் கொண்டு நீக்கிச் சௌகர்யப்படுத்திக் கொள்ளலென்பது எப்படி முடியாதோ, அப்படியே நித்யானந்தமாயுள்ள அறிவை ஜனன மரணத்துன்பங்களுக்கு உட்படுத்திப் பாதந்திரனாக ஜீவனாக்கி வைத்திருக்கின்றதெனக் கூறப்பட்ட க்லேசம், கர்மா முதலியவைகளை நன்றாய்த் தெரிந்து கொள்ளுதல் அவசியமாயிருக்கின்றபடியால் அவ்விஷயத்தில் சற்றுநாடுவோம்.— க்லேசம்

கர்மா, விபாகம், ஆச்ரயம், இந்நான்குமே ஜீவதர்மங்களாம். ஜீவ தர்மங்களெனில் ஜீவன்களில் உள்ள விசேஷங்கள் என்பது பொருள். எங்கும் வியாபித்து நித்யானந்தமாயுள்ள அறிவானது மனஸுள்ள இடத்திலிருக்கும். ஆதலின் அங்ஙனம் மனஸோடு கூடியிருக்கும் ஆபாஸ அறிவு ஜீவத்மா என்பது. இதனால் ஜீவத்தன்மையாகிய விசேஷமானது மனோ மூலமாகவே வந்திருக்கிற தென்றறியப்படும். இதனால் க்லேச கர்ம விபாகாச்ரயங்களென்றும் நான்கு விசேஷங்களும் மனது எனப்படும். க்லேசம் என்பது அவித்யை. அவித்யைக்கு ஆணவம், அஜ்ஞானம், மோகம், தமஸ் முதலிய சொற்களால் வழங்கப்படுவதாகும். அவித்யையாவது— அநித்யப்பொருளை நித்யமென்றும், அசுத்தப்பொருளைச் சுத்தமென்றும், துக்கப்பொருளைச் சுகமென்றும் அநாத்மப்பொருளை ஆத்மாவென்றும் எண்ணும்படி செய்விப்பது. இந்த ஸ்தூல தேகமானது எவ்வளவு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றப்பட்டபோதிலும் ஒரு சமயம் அழிவுள்ளதென்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை. இது நீர்க்குமிழிபோன்றதே. நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் இருந்த மனிதரை இப்பொழுது எங்கேயாவது பார்க்கமுடியுமா? அப்பொழுதிருந்த தேகமெல்லாம் அழிந்துபோக இப்பொழுதுள்ள தேகமெல்லாம் புதிதாய்த் தோன்றியவையன்றோ. இதைச் சற்று நிதானித்துப் பார்த்தால் இத்தேகம் அழிவுடையதாகிய அநித்யப் பொருளென்பதில் சந்தேகம் சிறிதும் உண்டாகாதல்லவா. இத்தேகமானது முற்றிலும் துன்பத்திற்கு மூலமாக இருக்கின்றது. முன்கூறியவாறு அவித்யையே சகலஜீவன்களுக்கும் அநாத்மாவாயுள்ள தேகத்தை ஆத்மாவென்று தோன்றும்படி செய்விக்கின்றது.

अविद्यास्मितारागद्वेषाभिनिवेशाः क्लेशाः ।
अनित्याशुचिदुःखानात्मसु नित्यशुचिसुखात्मख्यातिरविद्या ॥

அநித்யமும், அசுசியும், துக்கமும், அநாத்மாவாகிய பொருளில் நித்யம், சுசி, சுகம், ஆத்மா எனும் எண்ணத்தை உண்டுபண்ணுவதே அவித்யை என்று பதஞ்சலியோகஸூத்ரமும் உபதேசிக்கின்றது. இவ்விதம் அவித்தையைத் தொலைத்து வித்தையை ஸம்பாதித்து அதனால் ஈச்வரஸ்வரூபம்பெறவேண்டும். ஈசுவ

ஊனுவது பந்தங்களாகிய க்லேசம், கர்மா, விபாகம், எனும் இந் நான்குகளில் ஒன்ருேடும் சிறிதும் ஸம்பந்தியாமல் எங்குமுள்ள வனுய், எல்லாமறிவோனுய், ஸகலவல்லமையும் பொருந்தியவ னுய், அநாதிமுக்தனுய், பேரானந்த வடிவனேயாம்,

**क्लेशकर्मविपाकाशयैः अपरामृष्टः पुरुषविशेष ईश्वरः ॥**

**इति पातञ्जलयोगसूत्रे ।**

கிலேச கர்ம விபாககர்மங்களினுல் சிறிதும் ஸம்மந்தப் பட்டிராத புருஷ விசேஷன் ஈசுவரன் என்பது பதஞ்சலியின் ஸூத்ரம். ஈசுவரன் ஸகல உலகங்களின் உற்பத்தி ஸ்திதிலயங்களுக்கு ஏது வாயுள்ளவன். அவனில்லாத இடமில்லே.

நாம் அவனேக் காணுவிடினும் அவன் நாம் செய்யும் காரியங் களெல்லா வற்றையும் கண்டுகொண்டே இருக்கின்ருன். அவ னது பெருமை மனேவாக்குக் கெட்டாதது என்பது உண்மை. ஈசுவரன் எங்கிருக்கிருரென்ருல் நாமிருக்கும் இடத்திலே யே இருக்கின்ருன். ஆனுல் அவர் நமக்கெதிரில் காணப்படவேண் டும். அவ்விதம் எவராலும் காணப்படவில்லே. ஆதலால் ஈசன் கெட்டகாரியம் செய்வோர்களேத் தண்டிப்பவன் என்ற எண்ண மிராவிட்டால் ஸாமான்னிய ஜனங்கள் ஒன்றுக்கு மஞ்சாமல் தோன்றியவாறு நடந்து உலக நிலே சரிவர நடைபெருமல் கெட் டுப் போகும்படியாகும். அப்படிச் சாமான்ய ஜனங்கள் கெட்ட காரியங்களேச் செய்யாமலிருக்க வேண்டுமெனக் கருதி நமது முன்னேர்களால் ஈசனிருக்கிருன் என்று கட்டுப்பாடகவே எழு திவைக்கப்பட்டதாகச் சொல்லக்கூடாதோ என்ருல் இஃது அறியாமல் சொல்லுவதே

அதாவது உலகம் யாவும் மண், ஜலம், வாயு ஆகாயம் எனும் ஐந்து மூலபொருள்களினுலேயே அடங்கும் என்பது நிச்சயம். இவ்வைந்து பொருள்களேயும் நாம் பிரத்யக்ஷத்தில் காணப்படுவ தில்லேயே. நம்மால் காணப்படும் பொருள் மண், ஜலம், தீ, இம்மூன்றே. இங்ஙனம் நமக்கு எதிரில் காணப்படாமையி னுல் ஈசனில்லே என்போமானுல் வாயுவாகாசங்களும்காணப்படா மையைப்பற்றி அவைகளிரண்டையும் இல்லேயென்றே சொல்ல வேண்டியதாகும்.

அவ்விதம்கூறுவது எப்படிஉசிதமாகாதோ அதுபோல்சர்மசக்ஷுஸ்ஸையுடைய நம்போன்றவர்களுக்கு அறிய முடியவில்லை என்பதைக்கொண்டு கடவுள் இல்லையென்று சாதிக்கமுன்வருவதும் தவறேயாகும். ஆகையால் மூவுலகங்களுக்கும் பதியாய் விளங்கும் கடவுள் ஒருவருண்டென்று நம்பி அவரை அடிபணிந்து போற்றி அவரவர்களும் பிறவிப்பயனைப் பெறுமாறு வேண்டுகிறோம்.

K. R. வைத்யநாதசாஸ்திரி, மேலக்காவேரி.

---

# 2. ஸ்திரீ தர்மம்.

(746-வது பக்கத்தொடர்ச்சி)

**एवं परिचरन्ती सा पतिं परमदैवतम् ।**
**यशस्यमिह यात्येव परत्रैषा सलोकताम् ॥**

மேற்கூறிய இப்பலவிதமாகவும் தன்புருஷனை பரமதெய்வமாக எண்ணி அவனுக்குப் பலவிதம் விசுவாசத்துடன் உபசரித்து ஸேவை செய்துவரும் குலரத்தினமாகிய ஒரு ஸ்திரீ இஹலோகத்திலும் பரலோகத்திலும் இரண்டுவித லாபத்தைப் பெறுகிறாள். இந்த உலகத்தில் எப்பொழுதும் பெரும் புகழும் அழியாக்கீர்த்தியும் அடைகிறாள். இறந்தபின் தன்புருஷன் அடையும் மேலுலகம் அடைகிறாள்.

தன்வீட்டை எப்பொழுதும் அலங்காரம் செய்து பார்வைக்கு ரமணீயமாக வைக்கவேண்டும். வீட்டின் பின்புறத்தில் தோட்டம் ஏற்படுத்தி அதில் புஷ்பச்செடிகள் பழ விருக்ஷங்கள் காய்கறிப்பயிர்கள் வைத்து தினம் ஜலம் பாய்ச்சிக்களையெடுத்துக் காப்பாற்றவேண்டும். இவைகளுடன் நித்ய குடும்ப வைத்யங்களுக்கு வேண்டிய ஔஷதி மூலிகைகளை வைத்துப்பாதுகாக்க வேண்டும்.

மல்லிகை, முல்லை, ரோஜா, ஸம்பங்கி, விரூபாக்ஷி, கதிர்ப்பச்சை, பாதிரி, பாரிஜாதம், நார்த்தை, எலுமிச்சை, பாக்கு, தென்னை, மூங்கில், பனை, ஈந்து, கொய்யா, மா, அவரை வகைகள் புடல், கத்தரி, பூசனி, பரங்கி, பாகல், மிளகு, மிளகாய், மல்லி, கரிவகைகள் வல்லாரை, கரிசாரங்கண்ணி, பொடுதலை, கற்றாழை, கள்ளிவகைகள் இவைபோன்ற பலவித வாசனையுள்ள ரமணீயமான உபயோகமுள்ள ஸ்தாவர வர்க்கங்களை ஆசையுடன் ஆதரிக்கவேண்டும்.

அழகுள்ள பக்ஷிகள், இனிமையாய்ப் பாடும் பக்ஷிகள், உபயோகமுள்ள மிருகங்கள் இவைகளைத் தனித்தனிக் கூடுகள், கொட்டில்களில் வைத்துக் காப்பாற்றி, அன்னபானங்கள்போட்டு ஆதரிக்கவேண்டும்.

குயில், கிளி, குதிரை, மான், அன்னம், புனுகுபூனை, எருமை பசுக்கள், பட்டுப்பூச்சிகள் முதலியவைகளை அன்புடன் வளர்த்து உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

வீட்டில் ஒழிந்த வேளையில் செடியினின்றும் பருத்தியெடுத்து அடித்துப்பட்டை போடுதல், நூல் நூற்றல், வஸ்திரம் நெய்தல், கம்பளி வஸ்திரம், பட்டுவஸ்திரம் செய்தல், தென்னை பனை நார்களைக்கொண்டு கயிறு திரித்தல், மூங்கில், கோரை, பிரம்பு, இவைகளைக்கொண்டு பாய்கள் கூடைகள் ஆஸநங்கள் செய்தல், கோலம், சித்திரம் வரைதல் பலவித வர்ணங்களைத் தயாரித்தல், புஷ்பங்களைப் பலவிதம் அழகாக கோத்தல் முதலியபல வித கலைகளைக் கற்றுப் பழக்கம் செய்து வரவேண்டும். வீட்டு ஸாமான்களை வெயிலில் மாதம் ஒருமுறை உலர்த்திப் பத்திரப் படுத்த வேண்டும். எண்ணைப் பாத்திரங்கள் தைல நெய்பாத்திரங்கள், மருந்து ஸீஸாக்கள் இவைகளை மாதம் ஒரு தரம் சுத்தி செய்து வைக்கவேண்டும். ஆடைகளை வாரம் ஒரு முறை வெள்ளாவியில் வைத்து சுத்த வெண்மையாய் ஆக்கி உலர்த்தி வைக்க வேண்டும். ஆபரணங்களை பக்ஷம் ஒரு முறை சுத்திசெய்து துடைத்து ஸரிபார்த்து அணியவேண்டும். குடும்பத்திலுள்ள ஸகலர்களுக்கும் தைலஸ்நானம் ஒன்று விட்டு ஒரு நாளாவது

செய்து வைக்கவேண்டும். எல்லோருக்கும் மாதம் ஒரு முறை பேதிக்குக் கொடுக்கவேண்டும். ஆறுமாதத்திற்கொருதரம் வாந்தியெடுக்க மருந்து கொடுக்கவேண்டும். புண்ணியகாலங்களிலும் விசேஷதினங்களிலும், பண்டிகை நாட்களிலும் பாலர்கள், விருத்தர்கள், கர்ப்பிணிகள், விருந்தாடிகள், இவர்கள் எல்லோரையும் சிரித்த முகத்துடன் இனிய பிரியமான குரலுடன் ஆதரிக்கவேண்டும். அத்தினங்களில் காரியங்கள் கடுமையானதால் கோபம் பொறுமையானவரையும் பிடித்தாட்டும். ஆகையால் எச்சமயங்களில் கோபத்துக்கு அதிகாரம் வருமோ, அச்சமயங்களில்தான் அவைகளை அடக்கவேண்டும்.

> செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அவ்விடத்துக்
> காத்திலென் காவாக்கால் என்— குறள்.

அதாவது— ஒருவனுக்கு எவர் பேரில் கோபித்துக்கொள்ளலாமோ எவர்கள் இவன் கோபத்தைப் பொறுத்துக் கொள்ள அடிமைகொண்டிருக்கிறார்களோ (ஸேவகர்கள்) அவரிடத்தில் இவன் தன் கோபத்தை அடக்கிக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் அவன் கோபத்தை அடக்கியவனாவான். ஒருவன் எவரிடத்தில் (எஜமானனிடத்தில்) தன் கோபம் செல்லாதோ எவரிடத்தில் தன் கோபத்தைக் காண்பித்தால் தன் காரியத்துக்குக் கேடுவருமோ அவரிடத்தில் தன் கோபத்தை அடக்கிக் கொண்டால் என்ன, அடக்காதபோனால் தான் என்ன, அதாவது இந்த இடத்தில்தான் நிர்ப்பந்தமாய்த்தன் கோபத்தை அடக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

**योषितो नित्यकर्मोक्तं नैमित्तिकमथोच्यते ।**
**रजसो दर्शनादेषा सर्वमेव परित्यजेत् ॥**

இதுவரையில் ஸ்திரீகளின் நித்ய (தினம் செய்யவேண்டிய) கர்மங்கள் சொல்லியாய்விட்டன. இனிமேல் ஸ்திரீகளின் நைமித்திக (எப்பொழுதாவது விசேஷகாலங்களில்மட்டும் செய்யவேண்டிய) கர்மாக்கள் சொல்லப்படுகின்றன. ரஜஸ் வெளிப்பட்டதும் (பஹிஷ்டை—ஆனதும்) அந்தஸ்திரீ எல்லாக்கர்மாக்கள் காரியங்

களையும் விட்டுவிடவேண்டும். அந்த க்ஷணமுதல் நித்யகர்மாக்களில் அவளுக்கு அதிகாரமில்லை.

सर्वैरलक्षिता शीघ्रं लज्जितांतर्गृहे वसेत् ।
एकाम्बरा कृशा दीना स्नानालंकारवर्जिता ॥
स्वपेद्भूमावप्रमत्ता क्षिपेदेवमहस्त्रयम् ।

ரஜஸ்வலை (தாரம்) ஆனதும் உடனேசீக்ரமாக, லஜ்ஜையுடன் பிறர்பாராத தனி அறைக்குள் தங்கியிருக்கச் செய்யவேண்டும், ஒரே வஸ்திரம் தரித்திருக்கவேண்டும். ஆபரணங்களை கழட்டி வைத்துவிடவேண்டும். அதிக ஆகாரம் சாப்பிடாமல் இளைத்திருக்கவேண்டும். ஸ்நானம் செய்யக்கூடாது. அலங்காரங்கள் செய்யக்கூடாது. பூமியில் படுத்துறங்கவேண்டும். இவ்வித விரதத்துடன் மூன்று நாட்களைக்கழிக்கவேண்டும்.

स्नायीत सा त्रिरात्रान्ते सचैलाभ्युदिते रवौ ।
विलोक्य भर्तृवदनं शुद्धा भवति धर्मतः ॥

மூன்று இரவுகள் கடந்ததும் நான்காம்நாள் சூர்ய உதயம் ஆனபிறகு, ஸ்நானம் செய்யவேண்டும். ஸ்நானம் செய்தபிறகு தன் புருஷன் முகம்பார்த்ததும் தர்மப்ரகாரம் தான் சுத்தியடைகிறாள்.

कृतशौचा पुनः कर्म पूर्ववच्च समाचरेत् ।
द्विजस्त्रीणामयं धर्मः प्रायोऽन्यासामपीष्यते ॥

இவ்விதம் பஹிஷ்டைநீங்கி ஸ்நானம்செய்து சுத்தி ஆனவுடன் முன்போல் தன் நித்யகர்மாக்களைச்செய்ய ஆரம்பித்துவிடவேண்டியது. இத்தர்மங்கள் எல்லாம், பிராம்மண, க்ஷத்திரிய, வைச்யவர்ணத்தார்களுக்கு முக்யமாகச் சொல்லப்பட்டது. சூத்ர ஜாதி ஸ்திரீகளும் இதையே அநுஷ்டிக்கலாம்.

कृषिपण्यादिकृत्येषु भवेयुस्ता प्रसाधिकाः ।
संगीतैर्मधुराऽऽलापैः स्वायत्तस्तु पतिर्यथा ॥

भवेत्तथाऽऽचरेयुर्वै मायाभिः कार्यकेलिभिः ।
नास्ति भर्तृसमो नाथो नास्ति भर्तृसमं सुखम् ॥

தன் புருஷனுக்கு இச்சையிருக்கிறபடி தனக்கும் ஸாமர்த்யம் இருந்தால் அவர் இச்சையை நிறைவேற்றுவதற்காகக் கீழ்கண்ட சில கார்யங்களை ஸ்திரீ ஜனங்கள் செய்யலாம். வியாபாரம்செய்யலாம். ஸங்கீதங்கள் வாசிக்கலாம். இனிமையான ருசிகரமான பேச்சுக்கள் பேசிக்கொண்டிருக்கலாம். வேடிக்கைகள் செய்யலாம். இவ்விதம் பதிக்கு ஸந்தோஷம் உண்டாக்கப் பல விநோதங்களைச் செய்யலாம். ஏன் இவ்வளவுதூரம் இடங்கொடுத்தது என்றாலோ புருஷனுக்கு ஸமானமான வேறு நாதன் ஸ்திரீகளுக்கு யார் இருக்கிறார்கள். தன் புருஷனிடத்து ஏற்படும் ஸுகம்போல் வேறுஸுகம் கிடையாது.

विसृज्य धनसर्वस्वं भर्ता वै शरणं स्त्रियः ।
मितं ददाति हि पिता मितं भ्राता मितं सुतः ।
अमितस्य प्रदातारं भर्तारं का न पूजयेत् ॥

ஒரு ஸ்திரீ தன்னுடைய ஸகல ஸொத்துக்களையும் விட்டுவிட்டும் தன் புருஷனையே சரணமாக அடையவேண்டும். ஸ்திரீகளுக்குக் கணவன்தான் சரணம்: ஏன் என்றாலோ ஒரு ஸ்திரீக்கு தன் தகப்பன் கொஞ்சம்தான் கொடுக்கிறான். தன் சகோதரனும் கொஞ்சம்தான் கொடுக்கிறான். தன் பிள்ளை கொடுப்பதும் கொஞ்சம்தான். அளவில்லாத தன் சொத்து முழுவதையும் கொடுக்கிற தன் புருஷனை எந்த ஸ்திரீதான் பூஜிக்காமலிருப்பாள்.

ஆர்யப் பெண்கள் இத் தர்மங்களை அனுஷ்டித்து ஆர்ய குலங்களை உயர்த்துவார்களாக.

ஸாரம், ரேங்காச்சாரியார்.

# ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவ பத்திரிகை.

அவ்யாஜ பரோபகாரமென்கிற பிரத்தியுபகாரத்தைக், கருதாது கொடுக்கும் மேகம்போன்ற கொடையாளர்களாய், ஈசுவர பாதாரவிந்தங்களில் அசஞ்சல பக்தியுடையவர்களாயிருக்கும் தருமவான்களுக்கு ஸ்ரீ ராமசந்திரஸ்வாமியினனுக்கிரகத்தால் சகல ஐச்வர்யங்களுமுண்டாகும்.

கலௌயுகே கல்மஷமாநஸாநாம்,
நான்யோத்ர தர்ம: கலு நிச்சயேந
ராமேதி வர்ணத்வயமாதரேண
பும்ஸோ புவேத் தாபதவார்திதஸ்ய

இப்பரதகண்டத்திற்குத்திலகம்போல் விளங்கிவருகிற நாகபட்டிணத்திற்கு சமீபத்திலுள்ள புந்நாகவனம் என்னும் திவ்ய க்ஷேத்திரமாகிய நாகூரில் பெருமாள்கோவில் மேலவீதிமேல்அக்ரஹாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ பஜனமடத்தில் எழுந்தருளியிருக்கின்ற, ஸாக்ஷாத் ஸ்ரீவைகுண்டநிலயவாசியாய், வனமாலியாய், ஸ்ரீய:பதியாய், சேஷாங்கதல்ப சயனராய், புராண புருஷோத்தமராய், புண்டரீகாக்ஷராய், பரமபாவனராய், பக்தபராதீனராய், ஆதிமத்யாந்தரகிதராய், அனாதிப்பிரம்மமாய், ஜகத்வ்யாபியாய், அவ்யயராய், ஜோதிஸ்வரூபியாய், பக்தஜன ஹ்ருதய பங்கஜ நிலயவாசியாய் எண்ணினேரெண்ணங்களைப் பரிபூர்த்தி செய்யப்பட்டவராய் இம்மையில் தர்மார்த்த காமியங்களையும் மறுமையில் மோக்ஷஸாம்ராஜ்யத்தையும், கொடுக்கப்பட்டவராயுமான ஸாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கோலோகத்திலிருந்தும் துஷ்டத்வம்ஸ சிஷ்ட ஸம்ரக்ஷணார்த்தம் அவதரித்து தன்னுடைய பரம ப்ரியையாயும், சாபத்தினுல் பூலோக கோகுலத்தில் அவதரித்தவளுமான ஸ்ரீ ராதாதேவியினுடைய விவாஹத்தை பிருந்தாவனத்தில் காந்தர்வவிதியினுல் நடத்தின திவ்ய ராதா கல்யாண மஹோத்ஸவத்தை பகவத் கிருபையை முன்னிட்டு குரோதனநாம ஸம்வத்ஸரம் தனுர்மீ 11௳ முதல் 21௳ வரையில் நடத்துவதாய் நிச்சயித்திருக் கின்றமையால் ஷை உத்ஸவத்

திற்கு பக்தகோடிகள் யாவரும் தங்களிஷ்டமித்திர பந்து ஜனங்களுடன் வந்திருந்து ஜென்ம ஸாபல்யத்தை அடைந்து, பகவத் கிருபைக்கு பாத்திராளாக வேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

## உத்ஸவ விபரம்.

குரோதனஸு மார்கழிமீ 19உ (2—1—1926) சனிக்கிழமை மாலை 6 மணிக்கு விக்னேச்வர பூஜையும் பகவத் பஜனமும் கீர்த்தன குணானுபவங்களும் 7 மணிமுதல் 11 மணிவரையில் ஹரிகதை.

ஷை மார்கழிமீ 20உ (3—1—26) ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு திவ்ய நாமஸங்கீர்த்தனம் 7 மணிமுதல் 11 மணிவரையில் ஸ்ரீ கோபால கிருஷ்ண பரமாத்மாவுக்கும் ஸ்ரீ ராதா தேவிக்கும் நடக்கும் திருக்கல்யாணகதா ப்ரசங்கம், கல்யாண வைபவம். மாலை 8 மணிக்குமேல் மாங்குடி பிர்ம்மஸ்ரீ சிதம்பர பாகவதர் அவர்களால்நடத்தப்படும் கதை

ஷை மார்கழி 21உ (4—1—26) திங்கள் கிழமை காலை 11 மணிக்கு அஞ்சனேயஸ்வாமி உத்ஸவம். மாலை 6 மணிக்கு விடாயாத்தி உத்ஸவம்

இப்படிக்கு பாகவத ஸமூதாய தாஸன்,

ராம. து. வீராசாமி அய்யன்.

---

# விஷ்ணம்பேட்டை

# தர்மசாஸ்திர ஸபை.

விஷ்ணம்பேட்டை அக்கிரஹாரத்தில் அக்கிரஹாரவாஸிகளின் ஸதாசாரம் வித்யாபிவிருத்தி விஷயமாய் சென்ற ஐப்பசிமீ 1உ தர்மசாஸ்திரஸபை ஏற்படுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| பிரும்மஸ்ரீ | நாகநாதசாஸ்திரிகள் | ஸபாத்யக்ஷர். |
| ,, | எஸ். இராமநாதய்யர் | கார்யதர்சி. |
| ,, | சுந்தரேசசாஸ்திரிகள் | |
| ,, | சிவகுரு சுப்பிரமணிய அய்யர் | |
| ,, | டி. வி. ஸ்வாமிநாதய்யர் | |

இவர்கள் சேர்ந்து 5-பேர் அடங்கிய நிர்வாககமிட்டி ஏற்பட்டிருக்கிறது.

1. ஷை ஸபை ஆதரவில் துலாமாஸம் முழுவதும் துலாகாவேரி புராணம் இராமநாதய்யரால் படிக்கப்பட்டு பிரும்மஸ்ரீ நாகநாத சாஸ்திரிகளால் பிரதிதினம் உபந்யஸிக்கப்பட்டு கார்த்திகைமீ 4உ அசேஷமஹாஜனங்களின் பேருதவியால் காவேரிகலியாண மஹோத்ஸவத்துடன் பூர்ணஸமாப்தி செய்யப்பட்டது.

2. ஷை ஸபை ஆதரவில் பிரும்மஸ்ரீ வாஞ்சேசுவரசாஸ்திரிகள் என்கிற பிச்சுசாஸ்திரிகள் அவர்களால் உபநிஷத் பாஷ்யம் ஸம்பிரதாயப்படி ஸப்யர்களுக்கு உபந்யஸிக்கப்பட்டு வருகிறது. அவர்களாலேயே வித்யார்த்திகளுக்கு காவ்யபாடமும் நடந்துவருகிறது.

3. ஷை ஸபை ஆதரவில் அக்ரஹாரம் வேணுகோபாலஸ்வாமி ஸந்நிதியில் பிரும்மஸ்ரீ சுந்தரேசசாஸ்திரிகள் கிருஷ்ணகனபாடிகள் இவர்கள் முயற்சியால் யஜுர்வேத பாராயணம் பிரதி தினம் நடந்துவருகிறது.

4. ஷை ஸபை ஆதரவில் வித்யார்த்திகளின் பஜனைகோஷ்டி ஐப்பசி-மீ முழுவதும் அதிகாலையில் அக்ரஹாரம் வலம்வந்து பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்தார்கள். இந்த தநுர்மாதத்திலும் ஷை கோஷ்டியாரால் நாமஸங்கீர்த்தனம் சிறப்பாய் நடத்தப்பட்டுவருகிறது.

S. இராமநாதய்யர்.

ஸபை கார்யதர்சி.